[1971 ஜூன் 24

திரு. ஏ. ஆர். சுப்பையா : கிணறுகளுக்கு இடையே அதிக இடைவெளி இருக்கவேண்டுமென்ற விதி, சில சமயம் கிணறு வெட்டுவதைத் தாமதம் ஆக்கிவிடுகிறதே. இந்த இடைவெளி பிரச்சினையைத் தீர்க்க அரசு ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 15 ஏக்கருக்கு ஒரு கிணறு என்றுதான் நிபந்தனை விதித்திருக்கிறார்கள். கடன் கொடுத்தவர்களின் நிபந்தனைகளுக்கு நாம் கட்டுப்பட்டாக வேண்டியிருக்கிறது. இவ்வளவுதான் ஆழம், இவ்வளவு தான் அகலம் வேண்டுமென்று ஏ.ஆர்.சி. நிபந்தனை விதிக்கவில்லை. எனவே, ஆழமாகவும் அகலமாகவும் கிணறுகளை வெட்டி, தமிழ்நாடு மேனி எங்கும் செழிக்கச் செய்ய வேண்டும்.

திரு. வீ. மலைக்கண்ணன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் சப்மெர்சிவ் கிணறுகள் வெட்ட ரூபாய் 6,000, ரூபாய் 7,000 செலவு ஆகிறது. எனவே, இப்போது கொடுக்கப்பட்டு வரும் ரூபாய் 5,000, ரூபாய் 8,000 ஆக உயர்த்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ரூபாய் 5,000 என்று ஒரு விதி இருந்து வருகிறது. தனிப்பட்ட இடங்களில், அதிகமாகக் கேட்கும்பொழுது, விதி விலக்கு கொடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : கடன்கள் இரு தவணைகளாகக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக ஒரே தவணையாகவே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? இரு தவணைகளாகக் கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கால தாமதத்தைத் தவிர்த்து ஒரே தடவையாகப் பணம் பெற வேண்டுமானால், தகுந்த ஈடு இருக்கும் பட்சத்தில், பணம் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் சட்டமுன் வடிவு.

1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன் வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதியைக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச்சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1971 ஜூன் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு **அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.**

அடுத்து 1971-1972-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மீது பொது விவாதம் தொடரும்.

4. 1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** இந்த நிதி நிலை அறிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் முன்னேற்றம் அடைவதற்காக அவர்களுக்குப் பல கோடிக் கணக்கில் கடன்கள் வழங்கக் கூடிய திட்டங்கள் அமைக்கப் பட்டிருப்பதைக் கண்டு நான் இந்த அறிக்கையை வரவேற்கும் நோக்கில் என்னுடைய தொகுதியில் மதுரை மாவட்டம் ஆத்தூர், ஒரு சில அணைக்கட்டுகள் செயல்படாமல் இருப்பதை இங்கே எடுத்து சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, கன்னிவாடி கிராமத்தில் நாயோடை அணைக்கட்டுத் திட்டம், தெத்துப் பட்டி பெரிய கோம்பை அணைக்கட்டு, சின்ன கோம்பை அணைக்கட்டு, தர்மத்துப் பட்டி அணைக்கட்டு, சங்கங்குளம் வாய்க்கால், கசவன்பட்டி ஊராட்சி மாங்கரை அணை உடைப்பு, தாமரைக் குளம் தூர் எடுத்தல், மருதா நதியில் பிலி காடு அணைத் திட்டம். இத்திட்டங்களை எல்லாம் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மருதா நதி அணைக்கட்டுத் திட்டம் பற்றிக் குறிப்பிடும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகின்றது. அதை இங்கே கூற விரும்புகிறேன். 1967-ஆம் ஆண்டுக்குமுன் வி.எஸ்.எஸ். மணி ஐயா அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி அன்று காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தபோது மனம் உடைந்து சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூறுவதால்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று சொல்லி குறைபட்டபோது அப்போது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொள்ளலாமே என்று எடுத்துரைத்தார்கள். அந்தப் பெரியவரின் சவாலை ஐயா வி.எஸ்.எஸ். மணி அவர்கள் ஏற்று நாங்கள் ஆட்சிக்கு வந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்றார்கள். அந்தப் பெரியவரின் வாக்குப் பலித்து இன்றைய தினம் கழகம் ஆட்சிக்கு வந்து விட்டது. எனவே, இந்த நிலையில் இந்தத் திட்டங்களை எல்லாம் இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையில் இன்னும் 9 மாவட்டங்களில் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 9 மாவட்டங்களிலும் மதுரை மாவட்டம் சேர்ந்து இருப்பதை நான் உளமாரப் பாராட்டுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.